# கருணை - KARUNAI

## தமிழ் - ENGLISH

திருவள்ளுவர் ஆண்டு 2046
1st October 2015
வருட சந்தா ரூ. 50 மட்டும்

*கடவுள் நம்பிக்கை,*
*ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை இதழ்*
***Volume : 6 Issue : 2***

**உரிமை மற்றும் பதிப்பாளர்:**
திருமதி.
இராமலெட்சுமி
இளங்கோ,M.A.,
செல் : 9095050785, 9487683114

**ஆசிரியர்:**
திரு.A.G.சந்திரமோகன்.
செல் : 9442038770

**உதவி குழு:-**
தயவு.திரு.P.சுப்பாராஜ்,M.A. B.L.
செல் : 9443794751
அருள்
திரு.G.சுப்பிரமணியன்
செல் : 9842818242
கருணை திரு.
S.R. கண்ணப்பன்
செல் : 9443022146

**கௌரவ ஆலோசகர்கள்:**
திரு H. தாயுமானவர், B.L.,
உயர்திரு. M. கண்ணன்
உயர்திரு. C. ஆறுமுகம்

**Place of Publication**
Karunai Sabai Salai Bldg.,
Grace Hall,
34, Poombukar Nagar,
North Extn. Uthangudi,
Madurai-625 107.

**அன்புடையீர்! வணக்கம்.**

இக்காலத்தில் சுத்த சன்மார்க்க கொள்கை வெளிப்பட்டே ஆக வேண்டிய சூழ்நிலை உள்ளது. அன்பர்கள் வள்ளலாரை முடிவான சுத்த சன்மார்க்க நெறியிலேயே வெளிப்படுத்துங்கள். சுத்த சன் மார்க்கத்தை சார்ந்தவர் 'களையே நிலையத்தில் அறந ' காவலர்களாக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை மேதகு அறநிலைய ஆட்சித்துறையின் கவனத்தில் எடுத்து வைக்கப்பட்டுள்ளது நல்ல தொடக்கமே.

ஒழுக்கமே பிரதானம் என்ற பிரகடனம் இம்மாத நூலில் சிறப்பாக அமைத்து தந்துள்ளார் நமது திருமதி. ஏ.பி.ஜெ. அவர்கள் ஒழுக்கம் பயின்று இறையருள் பெறுவோம். உலகத் தார்களுக்கு இம்மார்க்கத்தின் நெறியை உள்ளது உள்ளபடியே உரைப்போம். உலகம் உய்க்க சுத்த சன்மார்க்க நெறி பரவுதல் அவசியமாக உள்ளது.

இப்படிக்கு : **இதழ்குழு**

# ஒழுக்கமே பிரதானம்

- ஏபிஜெ. அருள்

சுத்தசன்மார்க்கத்தில் "ஒழுக்கமே" பிரதானமாக உள்ளது.

மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகளை சுத்தசன்மார்க்கத்தில் நீக்கிக் கொள்ளலாம் என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

அன்பர்களே !

துன்பம் "பயத்திற்கு" காரணமாக உள்ளது. துன்பமும் பயமும் "மூப்பு"க்கு காரணமாக உள்ளது. துன்பம், பயம், மூப்பு "பிணி"க்கு காரணமாக உள்ளது. துன்பம், பயம், மூப்பு, பிணி "மரணத்திற்கு" காரணமாக உள்ளது.

என் மார்க்கம் 'இறப்பையொழிக்கும் மார்க்கம்' என்கிறார் வள்ளலார்.

மேலும்,

'சாகாதவனே சன்மார்க்கி'

சாகாக்கல்வியை தவிர வேறு ஒன்றுமில்லை என்கிறார் அய்யா.

ஆனால் நாம் நேரிடையாக "சாகாக்கல்வி" பற்றி அறிந்திட வந்துவிடுகிறோம். சாகாமல் இருப்பதே சுத்தசன்மார்க்கியின் லட்சியமாக குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதே கொள்கை.

துன்பத்தை தவிர்த்துக்கொண்டவரே பயமில்லாமல் இருக்கமுடியும்.

பயமில்லாதவரே மூப்பைத் தவிர்ப்பர்.

மூப்பு அடையாதவரே பிணி இல்லாதவர்.

பிணி இல்லாதவர் (அதாவது மூப்பு இல்லாதவர்) மரணம் அடையார்.

ஆக, மூப்பு அடைந்தாலே பிணி உள்ளவர் என்று அர்த்தம்.

இந்நிலையில் நாம் உள்ளோமா?

இந்நிலையை அடைய என்ன செய்ய?

அதற்கு வள்ளலாரை வணங்கினால் கிடைக்குமா? அல்லது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை குறித்து பாடினால் கிடைக்குமா?

இதோ அதற்கு வள்ளலார் அவர்களே பதில் தருகிறார்கள்.

வள்ளலார் கீழ்வருமாறு குறிப்பிட்டு உபதேசிக்கிறார்கள்.

பக்கம் 471-ல்

“தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாது இவ்வுலகத்தார் என்னைத் தெய்வமெனச் சுற்றுகின்றார்கள். ஐயோ! நம் சகோதரர்கள் தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாததினாலே யல்லவா நம்மைச் சுற்றுகிறார்கள்! “என்று நான் உள்ளும் புறமும் பரிதாப்பட்டுக்கொண்டே இருந்தேன்,” இருக்கின்றேன், இருப்பேன். தெய்வத்தை ஏன் தெரிந்து கொள்ள வில்லை யென்றால், ஒரு பதார்த்தத்தை அனுபவித்தாலல்லது அந்தப் பதார்த்தத்தினுடைய ருசி தெரியாது. ருசி தெரியாத பதார்த்தத்தின் மேல் இச்சை போகாது. அதுபோல், தெய்வத்தை உள்ளபடி அனுபவித்தாலல்லது, தெய்வத்தினிடத்தில் பிரியம் வராது. ஆதலால், தெய்வத்தை தெரிந்து கொள்ளவேண்டு மென்கிற முக்கிய லட்சியத்திலிருந்து கொண்டு விசாரஞ் செய்துகொண்டிருங்கள்.

பக்கம் 410-ல் மேலும்

“இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள்; எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள்” என்ற திருவார்த்தையதனால் தலைவனைத் தொழுதே தொழிலாக வுடையது கடமை”.

ஆக, வள்ளலாரை தெய்வம் எனக்கருதி வணங்குவதில் மட்டும் மரணத்தை தவிர்த்து விட முடியாது.

அடுத்து கடவுள் நிலையறிவதற்கு பக்கம் 438-ல் வள்ளலார் குறிப்பிடுகிறார்கள்.

அ∴து;

அறிவது எப்படியெனில்;

ஒழுக்கம் நிரம்பிக் கருணையே வடிவாக நிற்கும் விசார சங்கல்ப முண்டானால் நாம் தாழுங் குணம் வரும். அத்தருணத்தில் திருவருட் சக்தி பதிந்து அறிவு விளங்கும். ஆதலால், இடைவிடாது கருணை நன்முயற்சியில் பழகல் வேண்டும்.

ஆக சுத்தசன்மார்க்கத்தில் அடிப்படையாக உள்ளது.

-- இதுவரை நம் கருத்தில் வைத்திருந்த மற்ற பற்றுகளில் லட்சியத்தை பற்றற கைவிடுவதும், அதாவது நாம் கொண்டிருக்கும் சாதி சமய கட்டுப்பாட்டு ஆசாரங்களை நம்மிடமிருந்து ஒழித்தல்,

-- அடுத்து, நம்மிடமுள்ள கருணை விருத்திக்கு நன்முயற்சியும் அந்த நன்முயற்சி இடைவிடாது நடக்க ''ஒழுக்கத்தை'' நிரப்பிக்கொள்ள வேண்டும்.

ஆக மொத்தத்தில்,

விடுதல் ஒன்று. பெறுதல் ஒன்று

என இரண்டாக உள்ளது.

**விடுதல் எவையெனில்** "மற்ற பற்றுகளை"யே.

அவையாவன

1. உலகில் காணும் சமய மத மார்க்கங்களில் நாம் லட்சியம் வையாது இருத்தல்.

2. சாதி சமய கட்டுப்பாட்டு ஆசாரங்களை நம்மிடமிருந்து ஒழித்தல்.

**பெறுதல் எவையெனில்** ''ஒழுக்கமே''

அவையாவன

1. அடிப்படை ஒழுக்கம்

2. சுத்தசன்மார்க்க ஒழுக்கம்

**அடிப்படை ஒழுக்கம்** :

வள்ளலாருக்கு முன்பே இவ்வொழுக்கம் குறித்து வெளிப்பட்டு உள்ளது. எல்லா சமய மத மார்க்கத்திலும் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் மிக முக்கியமாக பார்ப்போமானால்;

கொல்லாமை, பொறுமை, சாந்தம், அடக்கம், இந்திரிய நிக்கிரகம், ஜீவகாருணியம் ஆகும்.

அதாவது பக்கம் 548-ல்;

நல்லறிவு, கடவுள்பக்தி, உயிரிரக்கம், பொதுநோக்கம், திரிகரண அடக்கம் முதலிய நற்குண ஒழுக்கங்களும், உண்மை உரைத்தல், இன்சொல்லாடல், உயிருக்கு உபகரித்தல் முதலிய நற்செய்கை ஒழுக்கங்கள் ஆகும் என்கிறார் வள்ளலார்.

அடுத்து,

**சுத்தசன்மார்க்க ஒழுக்கம்** :

இதோ நம் வள்ளலார் மிகத் தெளிவாகவே அதுவும் முந்தின இரவில் (30.1.1874) மேட்டுக்குப்பத்தில் சுத்த சன்மார்க்கத்தை தெரிந்துகொள்ள வந்தவர்களுக்கு கொடுத்த விளக்கம்:-

''இதுகாறும் என்னொடு நீங்கள் பழகியும் சன்மார்க்க ஒழுக்கம் இன்னதென்று தெரிந்து கொள்ள வில்லை யாதெனில்;

"இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள்; எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள்" என்ற திருவார்த்தையதனால் தலைவனைத் தொழுதே தொழிலாக வுடையது கடமை".

அன்பர்களே !

சாகாக்கல்வி குறித்து

1. தெரிந்துகொள்வது

2. அறிவது

3. அனுபவிப்பது என உள்ளது.

ஒருவர் ஒன்றை தெரிந்துகொள்ள மொழியறிவு மற்றும் அதாவது இந்திரியக் கருவிகள் மூலம் காரணத்தால் முடியும். இது இந்திரிய கரண அறிவாகும்.

அறிந்துகொள்வது யாதெனில்; நன்முயற்சியால் மற்றும் அதாவது நம் ஒழுக்கத்தால் சாகாக்கல்வியின் பிரயோஜனத்தை அறிந்து கொள்ளமுடியும்.

இதற்கு நம் ஜீவ அறிவே போதும்.

சாகாக்கல்வியை தெரிந்து தெரிந்தவுடன் அறிந்து அறிந்தவுடன் அனுபவிக்க வேண்டுமெனில் அதற்கு ஆண்டவன் அருளாலே மட்டுமே முடியும்.

இதுவே ஆன்ம அறிவு ஆகும். ஆன்மஅறிவு என்பது உண்மையறிதல் ஆகும். ஆன்மஅறிவாலேயே இறைநிலை காணுதல் வேண்டும்.

ஆண்டவரின் அருளை வள்ளலாரின் வழியை பின்பற்றினால் அன்றி பெற முடியாது.

வள்ளலார் வழி என்றால் அது சுத்த சன்மார்க்கமே.

சுத்தசன்மார்க்கம் என்றால் அது சுத்தசன்மார்க்க ஒழுக்கமே ஆகும்.

(ஒழுக்கம் என்பது நெறி) சுத்தசன்மார்க்க ஒழுக்கம் எவையெனில்;

## “ஆசாரங்களை விட்டொழித்தல்

## மற்றும்

## ஆண்டவனையே தொழுதல்”

**விட்டொழிக்க வேண்டிய ஆசாரங்கள்** எவை எவை என இதோ வள்ளலார் பட்டியலிட்டு காட்டியுள்ளார்கள்

ஜாதிஆசாரம், குலாசாரம், ஆசிரம-ஆசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சமயாசாரம், மதாசாரம், மரபாசாரம், கலாசாரம், சாதனாசாரம், அந்தாசாரம், சாஸ்திராசாரம் முதலிய ஆசாரங்கள்.

அடுத்து, **ஆண்டவனையே தொழுதல்.**

ஆண்டவனையே தொழுதல் என்றால் எந்த ஆண்டவரை? உண்மைக்கடவுளையே.

இதோ வள்ளலாரே சொல்கிறார்கள் எந்த ஆண்டவரை வழிபாடு செய்ய வேண்டும் என்று பக்கம் 559-ல்

எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும், எல்லாப் பொருள்களையும், மற்ற எல்லாவற்றையும் தோற்றுவித்தும், விளக்கஞ் செய்வித்தும், துரிசு நீக்குவித்தும், பக்குவம் வருவித்தும், பலன் தருவித்தும், எங்கும் பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக்கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மையன்பாற் கருத்திற் கருதி வழிபாடு செய்யின் அக்கடவுள் திருவருள் நமது கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்குமென்றும், அத்திருவருள் விளக்கத்தால் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வித்தும் எவ்வளவுந் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை யடைதல் கூடுமென்றும் நம் அறிவில் உண்மையாக உணர்ந்து வழிபாடு செய்ய வேண்டும் என்கிறார் வள்ளலார்.

அன்பர்களே !

-- வெளிப்பட்டுள்ள பயிர் தழைத்து வளர சுற்றியுள்ள களைகளை ஒரு விவசாயி எடுப்பது போல் நம்மிடமுள்ள கருணையை விருத்தி செய்ய நம்மிடமுள்ள சாதி சமய கட்டுப்பாட்டு ஆசாரங்களை விட்டொழித்தல் வேண்டும்.

-- பயிர் நன்கு வளர்வதற்கு இயற்கை உரமிடும் அந்த விவசாயி போல் நாம் நம்மிடம் பொது நோக்கம் என்ற சத்திய ஞானாசாரத்தை வருவித்துக்கொள்ள வேண்டும்.

-- பயிர் நன்கு வளர்ந்து நிற்கும் பருவத்தில் வயலில் தண்ணீர் நிறுத்திவிடுவது போல் தெரிந்து அறிந்துகொண்ட சாகாக்கல்வி கைகூட நாம் நம்மிடமிருந்து தேக, போக, ஜீவ சுதந்திரங்களை நீக்கிவிட வேண்டும்.

-- எப்படி அந்த விவசாயி தன் தொழில் தெரிந்த மற்றவர்களின் துணைக்கொண்டு பயிர்களை அறுவடை செய்து நெல்மணிகளை கிடங்கில் வைப்பது போல் நம் ஒழுக்கத்திற்கு ஒத்தவர்களுடன் சேர்ந்து இடைவிடாது நன்முயற்சியில் இருந்து கொண்டு கடவுள் நிலையை உள்ளத்தில் காணுதல் வேண்டும்.

-- சேமித்த நெல்மணிகளை தனக்கே அந்த விவசாயி வைத்துக்கொள்ளாமல் மற்றவர்களின் பசியைப் போக்க கொடுப்பது போல் நாம் பெற்ற சுத்தசன்மார்க்கப் பயனை எல்லாரும் பெற வேண்டும் என ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை நம்மில் வேண்டும்.

-- விவசாயியின் இந்த செயல் அவர் வாழ்வில் சந்தோசமும், உலகத்தார்களுக்கு பயனுள்ளதாகவும் அமைவது போல், சுத்த சன்மார்க்கிக்கு மரணமில்லாப் பெருவாழ்வும், என் போல் பெருக இவ்வையகம் என்ற பொதுநோக்கமும் அமையும்.

இது (விவசாயம்) புறத்தில் சிறப்பு. வாழ்வியல்.

இது (சுத்த சன்மார்க்கம்) அகத்தின் உண்மை. வாழ்வியலும் அருளியலும்.

நன்றி !

# அக அனுபவமே உண்மை

-ஏபிஜெ. அருள்

சுத்த சன்மார்க்கத்தில் வள்ளலாரால் கண்டு உலகிற்கு வெளிப்படுத்திய கடவுளே "உண்மை கடவுள்". அக்கடவுள் எங்கு உள்ளார்?

எங்ஙனமாக விளங்குகிறார்?

எப்படி அறிவது?

உண்மைக்கடவுள் யார்? எங்கு உள்ளார்? எங்ஙனமாக விளங்குகிறார்? என்ற அனைத்து கேள்விகளுக்கும் வள்ளலார் அவர்கள் "பதி விளக்கம்" என்ற 13 பாடல்கள் மூலம் நமக்கு தெரிவித்துள்ளார்கள்.

ஆக, இகநிலைப்பொருளாய் பரநிலைப் பொருளாய்

அகமறப் பொருந்திய அருட்பெருஞ்ஜோதி (அகவல் 7, 8) மேலும்

ஈனமின்றிகபரத் திரண்டின் மேற்பொருளாய்

ஆனலின்றோங்கிய அருட்பெருஞ்ஜோதி (அகவல் 9,10)

அதாவது;

(உரைநடைப்பகுதி 549)

சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக்கடவுள் ஒருவரே!

அகம்புற முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி
நிறைந்த சுத்த மெய்யறிவென்னும்
பூரணப் பொது வெளியில் அறிவார் அறியும்
வண்ணங்களெல்லாமாகி விளங்குகின்றார்.

இங்ஙனமாக "உண்மை கடவுள்" விளங்குகிறார் என்று வள்ளலார் அறிவிக்க நாம் தெரிந்துகொண்டோம்.

நிற்க !

நமது அறிவில் அந்த உண்மைக்கடவுளை உணர ஆசை இல்லையா?

அக்கடவுளின் "அருள்" பெற வேண்டாமா?

இங்ஙனம் ஆசைப்படும் அறிவே "சத்திய அறிவு" ஆகும்.

ஆசைப்பட்டால் மட்டும் போதுமா?

நன்முயற்சி செய்தல் வேண்டும்.

நன்முயற்சி என்றால் நல்ல விசாரணை.

நல்ல விசாரணை என்றால் அருளாகிய ஆண்டவரின் நிலை காண்பதே!

அந்த நிலையறிய முதலில் ஒழுக்கம் நிரப்புதல் வேண்டும்.

மேற்படி அருள் நிலை அறிதல்,

உடலால், உடலில் உள்ள மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவைகளால் அறிந்துகொள்ள முடியாது. அவைகளை கடந்து "அனுபவத்தில்" ஏற்படுகின்ற உண்மை அது என்கிறார் நம் வள்ளலார். (அகவல் 118, 119).

மேலும்,

உனும் உணர் உணர்வாய்

உணர்வெல்லாம் கடந்த அனுபவ அதீதமாகி இருக்கும் மெய்ப்பொருளே என்கிறார்கள்.

அந்த மெய்ப்பொருளாகிய அருளை

"உளவினில் அறிந்தால் ஒழிய மற்றளக்கின்

அளவினில் அளவா அருட்பெருஞ்ஜோதி" என்கிறார் வள்ளலார். (அகவல் 124, 125)

6-ம் திருமுறையில்;

- வள்ளலார் அனுபவத்தே ...

- ஆனந்த அனுபவந்தான் உறுமோ...

- அகத்திணத்தன் இடமாக்கி அமர்ந்த அருட்குருவே

- உள்ளத்தே காணாத காட்சி எலாம் காண்கின்றேன்

- சிவநிலை தனில் உறும் அனுபவ நிறைவே

அகம், புறம் எங்கும் நீக்கமற விளங்குகின்ற கடவுள், அவரவர் ஒழுக்கத்தின்பால், நன்முயற்சியில், உள்ளத்தில், அகத்தில் அறிவதாக, அனுபவிப்பதாக உள்ளது. இதுவே உண்மை.

வள்ளலார் காலத்தில் அவரின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் உரியவர்கள் பலர் இருந்தாலும், சுத்தசன்மார்க்கப் பயனாகிய மரணமில்லா பெருவாழ்வு அவர்கள் பெறவில்லை. அவர்களுக்கு வள்ளலாரும் கொடுக்கவில்லை. சுத்த சன்மார்க்கத்தை விரும்பியவர்களாக இருந்தார்களே அன்றி, அந்நெறியை கடைப்பிடிக்கவில்லை. எனவேதான் என்மார்க்கத்தில் "அக அனுபவமே உண்மை" என்கிறார்கள்.

சத்திய அறிவால் அவரவர் சுத்தசன்மார்க்க நெறியில் நின்று பயின்று அறிந்து, உள்ஒளி அனுபவம் பெறுதல் வேண்டும்.

இந்த அனுபவவே அக அனுபவம்.

இதனால் அருள்கிட்டும்.

இறவா நிலையை வள்ளலார் போல் நாமும் பெறலாம்.

இது சத்தியம். இது சத்தியம். இது சத்தியம்.

என்கிறார் நம் வள்ளலார்.

## சுத்த சன்மார்க்கத்தில் முதன்மையான முக்கியமான வார்த்தை எது?

## - ஏபிஜெ. அருள்

அனைத்தும் அறிந்து, அனுபவித்து, மற்ற எல்லோரும் அறியும் வண்ணம் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையில் சுத்தசன்மார்க்கத்தை வெளிப்படுத்தியவர் நம் வள்ளலார்.

அம்மார்க்கத்தில் முதன்மையான முக்கியமாக உள்ளது "அருள்" ஆகும்.

அகவலில்;

"அருளுறின் எல்லாம் ஆகுமீது உண்மை
அருளுற முயலுகென்றருளிய சிவமே"

பாடலில்;

"அருள் அளித்தான் அன்பளித்தான் அம்பலத்தான் உண்மைப்
பொருள் அளித்தான் என்னுட் புணர்ந்தான்..."

"தெரிந்தேன் அருளால் சிவம் ஒன்றே என்று...."

"அருளறி வொன்றே அறிவு மற்றெல்லாம்
மருளறி வென்றே வகுத்த மெய்ச் சிவமே....."

என்பதின் மூலம் நாம்

அருளறிவு பெறுவதற்கே நன்முயற்சி செய்தல் வேண்டும். இந்த அருளை அறியாதவர் இறைவனின் நிலையை அறிய முடியாது. இதோ அந்த அகவல்;

"அருளறியார்தமை அறியின் எம்மையும்
பொருளறி யாரெனப் புகன்ற மெய்ச்சிவமே".

மேலும்;

“அருள்நிலை ஒன்றே அனைத்தும் பெறுநிலை
பொருள்நிலை காண்கெனப் புகன்றாமெய்ச் சிவமே”

இங்ஙனம் சிறப்புடைய “அருள்” எங்கு உள்ளது?

இதோ அகவல்;

“அருளே நம்மியல் அருளே நம்முரு
அருளே நம்வடி வாமென்ற சிவமே”.

மேலும்,

இந்த அருளே,
நமது அடியும் முடியும். அதுவே

நமது நடுவும் நமது அறிவு,
மனம், குணம், நம்பதி,
நம்பதம், நமது இடம்,
நமக்குரிய துணை, நமது தொழில்,
நமது விருப்பம், நமது பொருள்,
நமது ஒளி, நம்குலம்,
நம் இனம், நம் சுகம்,
நம் பெயர், அதுவே நாம்
என்று அறிவாயாக என்றது ஒருமைச்சிவம் என்கிறார் வள்ளலார்.

நம்மிடம் அமைந்துள்ள அருளை நமக்கே தெரியவிடாது மறைக்கும் மறைப்புகள் உள்ளது.

இதோ அந்த உண்மை சொல்லும் அகவல்;

“தோற்றமாம் மாயைத் தொடர்பறுத்தருளின்
ஆற்றலைக் காட்டும் அருட்பெருஞ்ஜோதி”

“சுத்த மாமாயைத் தொடர்பறுத்தருளை
அத்தகை காட்டும் அருட்பெருஞ்ஜோதி”

ஆக,

முக்கியமாக நம் அருளை மறைக்கும் மறைப்புக்களை அகற்றிடுவதே நமது முதல் பணி மற்றும் பயிற்சியாகும்.

சுத்த சன்மார்க்கத்தின் மரபு நான்கில் ஒன்று;

“மலம் ஐந்தும் வென்ற வல்லபமே
தனித்த பூரண வல்லபம்”.

ஐந்து மலங்களாவன;

1. ஆணவம்
2. கன்மம்
3. மாயை
4. மாமாயை
5. திரோதயி

அவை முறையே

1. காரிருள்
2. வினை
3. மயக்கம்
4. உள்மயக்கம்
5. மறைப்பு ஆகும்.

இங்கு ஆணவம் இற்கையானது. கன்மம் செயற்கையானது. மாயை இயற்கையில் செயற்கையானது. மேற்படியான மலங்களிலிருந்து நாம் விடுபட வேண்டும். மேற்படியான மலங்களிலிருந்து விடுபட வேண்டுமானால் “உண்மை”யை அறிய வேண்டும். “உண்மைக்கடவுளை” நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து உண்மை அன்பால் வழிபாடு செய்ய வேண்டும்.

நிற்க !

உண்மையை அறிவதற்கு முன், நமக்கு விதிக்கப்பட்ட, நம்மை கட்டுப்படுத்தும் பொய்யான கற்பனையான, சாதி, சமய ஆசாரங்களை விட்டொழிக்க வேண்டும் என்கிறார் வள்ளலார்.

ஆக, மெய்நெறி சார்ந்து, சமய விகற்பங்களை நீக்குவதின் மூலம் மலங்களை நீக்கிக்கொள்ளலாம். இறை உண்மையை நமக்கு தெரியவெட்டாது மறைக்கும் திரைகளை விசேஷ நன்முயற்சியால் அதாவது இடைவிடாது "கருணையை" நன்முயற்சியில் பழகுவதின் மூலம் நீக்கிக் கொள்ளலாம் என்ற உண்மையை வெளிப்படுத்தியவர் வள்ளலாரே.



## சங்கங்களுக்கு அறிவிப்பு

தங்கள் சங்க முகவரியை எங்களுக்கு அனுப்ப வேண்டுகிறோம். இதழ் மொத்தமாக அனுப்பி வைக்க உள்ளோம். கருணை இதழுக்கு தொடர்ந்து ஆதரவு தந்து உதவும்படி வேண்டுகிறோம்.

## முக்கிய அறிவிப்பு :

மாத இதழாக வந்து கொண்டிருந்த கருணை இதழ் காலாண்டு இதழாக வருகிறது. அன்பர்கள் தொடர்ந்து ஆதரவு தர வேண்டும். காலாண்டு இதழுக்கு தபால் கட்டணச் சலுகை கிடையாது என்றதால் கடந்த மாத இதழ் அனுப்ப முடியவில்லை. சங்கங்களுக்கு மற்றும் அன்பர்களுக்கு மொத்தமாக அனுப்பப்பட்டது. ஏற்பட்ட அசௌகரியத்திற்கு வருந்துகிறோம். தொடர்ந்து சங்கங்களுக்கும் குறிப்பிட்ட அன்பருக்கும் மொத்தமாக அனுப்பி வைக்கப்படும்.

# தெய்வநிலையம் அறங்காவலர்கள் நியமனம் குறித்து உயர்திரு. ஆணையரின் பதிலுரை

மேதகு உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் **கருணை இதழ் ஆசிரியர் திரு. A.G.சந்திரமோகன்** அவர்களை **இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர்** வரவழைத்து 14-9-2015 அன்று விசாரித்தார்கள். இவருடன் திருச்சி வள்ளுவர் வள்ளலார் மன்றத்தலைவர் திரு. **T.கங்காதரன் அய்யா,** இராஜபாளையம் திரு. **சகாதேவராஜா** மற்றும் குறிஞ்சிப்பாடி வள்ளலார் மன்றத்தலைவர் திரு. **சுப்பிரமணியன்** அவர்களும் மற்றும் திரு. **சரவணன்** ஆஜராகி தங்கள் கருத்தினை வாய்மொழி மூலமாக மற்றும் எழுத்துமூலமாக கொடுத்தார்கள். 14-9-2015 அன்றே விசாரணையை முடித்துக்கொண்டார் ஆணையர். கடந்த 9-10-2015 அன்று 8 பக்க அளவில் பதிலுரையை தந்துள்ளதாக திரு. A.G.சந்திரமோகன் தெரிவித்தார்கள். அதில் உயர்திரு. ஆணையர் குறிப்பிட்டிருப்பதில் முக்கியப் பகுதி மட்டும் கீழே தரப்பட்டுள்ளது.

**கோரிக்கை :**

“வடலூர், திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையத்தின் ஐந்து அறங்காவலர்களில் மூன்று நபர்கள் **“சுத்த சன்மார்க்கத்தை”** சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்”.

**பதிலுரை :**

“சுத்த சன்மார்க்க நெறி” என்பது திருஅருட்பிரகாச வள்ளலாரால் விளக்கமாக எழுதப்பட்ட வாழ்வியல் நெறிகளை ஏற்று வாழுகின்ற வாழ்க்கை முறையாகும். இவற்றின் வாயிலாக மரணமில்லாப் பெருவாழ்வு எனும் இலக்கை அடைந்திட வேண்டி, நம் வாழ்வை நடத்தி, இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம்,

ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் ஆகிய நால்வகை ஒழுக்கங்களையும் உபாயமாகக் கொள்ள வேண்டும். அதற்கு, ஜீவகாருண்யமே கருவியாகும். "ஜீவ காருண்யத்தின் முக்கிய லட்சியம் ஏழைகளுக்குண்டாகிற பசி என்கிற பெரிய ஆபத்தை நிவர்த்தி செய்கின்றதே." (சாலை விளம்பரம் 23.05.1867) சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் ஆகிய மூவகை தேகசித்திகளை சுத்தசன்மார்க்கியர் பெறுவதால், பதவி, பட்டம், ஆசை போன்ற பற்றறுத்தவர்களும் ஆவார்.

மேற்படி ஒழுக்க விளக்கங்களின்படி சுத்த சன்மார்க்கம் என்ற ஒழுக்க வாழ்வினை ஏற்றவர்களாக இந்நிறுவனத்தின் அறங்காவலர்களில் ஐந்து நபர்களில் மூவர் இருக்க வேண்டும் என்பது மனுதாரரின் கோரிக்கை.

அறங்காவலர்கள் நியமனத்தின்போது, அறங்காவலர்களின் தகுதிகள் குறித்து, ஏதும் இத்துறை பரிசீலிப்பதே இல்லை என்ற மனுதாரரின் தவறான கருத்தையே இக்கோரிக்கை வெளிப்படுத்துகிறது.

அறங்காவலர்களின் நியமனங்களின் போது, பரிசீலிக்க வேண்டிய வயது, ஆண், பெண் என்ற இன்றியமையாத அடிப்படைத் தகுதிகள் உள்ளவரா என்றும், நியமனத்திற்குரிய அறநிறுவனம் அல்லது திருக்கோயிலின் பழக்கவழக்கங்களை அறிந்தவர்களா? என்பதையும் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு 25ஏ-ல் சொல்லப்பட்ட ஷரத்துகளின்படி விண்ணப்பதாரர் உள்ளனரா என்பதையும் உறுதி செய்த பின்புதான் அறங்காவலர் நியமனம் செய்யப்படுகிறது என்பதை மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

அறங்காவலர்களின் விண்ணப்பங்களுடன், அவ்விண்ணப் பங்களில் தெரிவிக்கப்படும் விண்ணப்பதாரர்களின் தகவல்கள் குறித்த சான்றாவணங்களை ஒப்புநோக்கி, விண்ணப்பத்தின் பதிவுகள் சரிபார்க்கப்படுவதோடு, துறை அலுவலர்களை அன்னாரின் ஒழுக்க நெறிகளைப் பற்றி அவரை நன்கு அறிந்த

வட்டாரங்களில் விசாரிக்கச்செய்து அறிக்கை பெற்றும், குறிப்பாக-காவல்துறை மற்றும் வருவாய்த்துறை பதிவுகளில் அவர் குறித்த சமூக நெறிகளுக்கு ஒவ்வாத பதிவுகள் ஏதும் உள்ளனவா? என்று பெறப்படும் குறிப்புகளுக்குட்பட்டும் மட்டுமே பரிசீலிக்கப்பட்டு, அதன்பின் அறங்காவலர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

மேற்சொன்ன இத்துறையின் பரிசீலனை இவ்வறநிறுவனத்தின் அறங்காவலர் நியமனத்திலும் தவறாது கடைபிடிக்கப்பட்டு வருகிறது. மேலும், விண்ணப்பதாரரிடம் அவரது தனிப்பட்ட வாழ்க்கை குறித்து கோரப்படும் விவரங்களில் அறங்காவலர் பதவிக்கு ஒவ்வாத பிறழ்வுகள் /தவறுகள் ஏதுமில்லை என்று அளிக்கின்ற (self declaration) சுயபிரகடனத்தின் பிறகே அறங்காவலர் நியமனம் செய்யப்படுகிறது. பின்னாளில் அன்னாரின் நடவடிக்கைகள் பொருத்தமற்றது எனக் கண்டறிகையில் நீக்க நடவடிக்கைக்கு அடிப்படையாக அது அமையும்.

இத்தகு வரையறைகள், கடமைகள், தகுதிகள், நிபந்தனைகள் அறங்காவலர் குழுவினருக்கு உள்ளது என்பதைக் கருத்தில்கொண்டால், இவ்வறநிறுவனத்தின் (வழிபாடு மட்டுமல்லாத) பல்வேறு நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், நிறைவேற்றவும் அறங்காவலர்கள் சுத்த சன்மார்க்கத்தை அறிந்தவராகவும் மேற்கொள்பவராகவும் இருப்பதோடு, நிர்வாகத்திறனும் பொதுவாழ்வில் அக்கறையும், ஈடுபாடும், செயல்பாட்டு முன் அனுபவங்களும் கொண்டவர்களாக இருப்பவர்களை அறங்காவலர்களாக இவ்வறநிறுவனத்தில் நியமனம் செய்யும் வாய்ப்பு உள்ளதையும் சன்மார்க்க நெறிகளுக்கு ஒவ்வாதவரை அறங்காவலர்களாக நியமிக்க வாய்ப்பேயில்லை என்பதையும் மனுதாரருக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்படி இத்துறையின் அறங்காவலர் நியமனம் குறித்த கோரிக்கையைப் பொறுத்து மூன்று அறங்காவலர்களுக்கு மட்டும் அல்லாமல் அறங்காவலர்கள் ஐவருக்குமே இப்பரிசீலனை இருந்துவருகிறது என மனுதாரருக்கு தெரிவித்துக கொள்ளப்படுகிறது....

வள்ளலார் தெய்வநிலையத்தில் மனுதாரர் குறிப்பிடுவது போல் தற்போது ஆயுட்கால உறுப்பினர் என்ற சந்தா ஏதுமில்லை. ரூ. 500 மட்டும் செலுத்தியவர் 10 ஆண்டு சந்தாதாரர் என்றும், ரூ. 50 செலுத்தியவர் ஒரு ஆண்டு சந்தாதாரர் என்று மட்டுமே உள்ளனர். இவர்கள் வள்ளலார் தெய்வநிலையத்தில், சத்திய தர்மசாலை, சத்திய ஞான சபை, மேட்டுக்குப்பம் சித்திவளாகம், மருதூர் வள்ளலார் அவதார இல்லம், தண்ணீரில் விளக்கெரித்த கருங்குழி சன்னதி மற்றும் 1865-ல் வள்ளலார் நிறுவிய சன்மார்க்க சங்கம் ஆகியவற்றில் அவ்வப்போது நடைபெறும் நிகழ்வுகளை அறிந்துகொண்டு வள்ளலாரின் கொள்கைகளை தாம் தொடர்ந்து பின்பற்றி வருவதற்காக சங்க உறுப்பினராக இருந்து வருகின்றனர்.

இச்சங்க உறுப்பினர்களில் எல்லோருடைய சுயதகவல்கள் மற்றும் நடவடிக்கைகளும் பதிவு செய்யப்பட்டு அறியும் நிலையில் இல்லை.............

.................இவ்வகையில் சன்மார்க்க சங்கத்தில் ஆயுட்கால சந்தாதார்கள் இல்லை என்பதும், அச்சந்தாதாரர்கள் மட்டுமே அறங்காவலர்களாக வேண்டும் என்பது நல்ல தலைமையைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைக் கட்டுப்படுத்தும் என்பதையும் மனுதாரருக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது................

**கோரிக்கை 3 :**

**நியமிக்கப்படும் ஐந்து அறங்காவலர்களில் அனைவரும் வள்ளலார் கட்டளைப்படி கொலை, புலை தவிர்த்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.**

..... கோரிக்கையில் காணும் புலை, கொலை தவிர்த்தவர் பற்றிய குறிப்பு திருவருட்பிரகாச வள்ளலாரால் அருட்பெருஞ்சோதி வழிபாட்டிற்காக ஸ்தாபிக்கப்பட்ட சத்தியஞானசபையின் மூன்று வாயில்களிலும் எழுதப்பட்டு (இன்றளவும் எழுத்துக்கள் புதுப்பிக்கப்பட்டு) அறிந்தோர்க்கும், அறியாதோர்க்கும் வழிபாட்டு நிபந்தனையாகவே விளங்கி வருகிறது.

**“புலை கொலை தவிர்த்தோர் மட்டுமே**

**உள்ளே புகுதல் வேண்டும்”**

என வள்ளற்பெருமானாராலேயே அறிவிப்பு வாசகம் எழுதப்பட்ட நிலையில், அதனை பின்பற்றி வழிநடப்பது என்பது வழிபாட்டிற்கு வருவோரின் உளச்சான்றுக்கு உட்பட்டதே ஆகும்.

மேலும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தையும், சன்மார்க்க நெறியையும் வெவ்வேறு என கருத இயலாது. புலை, கொலை தவிர்த்தல் என்பது மட்டுமல்லாது பல்வேறு வாழ்வியல் ஒழுக்கங்களை கடைப்பிடிப்போரே சன்மார்க்கி ஆவார் எனும்போது, மேலே மனுதாரரின் கோரிக்கைகளுக்குத் தெரிவிக்கப்பட்ட குறிப்புரைகளின் அடிப்படையிலேயே தற்போதைய நடைமுறையில் இவ்வற நிறுவனத்திற்கு தேர்வு செய்யும் அறங்காவலர்களின் விண்ணப்ப மனுக்களோடு பெறும் தக்க உறுதிமொழிகளும், விண்ணப்பதாரரின் தனிவாழ்வு குறித்து மேற்கொள்ளும் சரிபார்ப்பு முறைகளும் போதுமானதாக உள்ளன என்பதை மனுதாருக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இறுதியாக வடலூர் அருள்மிகு அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்திற்கு அறங்காவலர்கள் தகுதி குறித்தும், நிறுவனர் திருவருட்பிரகாச வள்ளலார் அவர்களின் தனித்த கோட்பாடுகள் அமலாக்கம் குறித்தும், தனித்த வழிபாட்டு கோட்பாடுகள் குறித்தும் மீண்டும், மீண்டும் இத்துறையில் பல்வேறு முறையீடுகள் வரப்பெறுவது, கூர்ந்து நோக்கத்தக்கது.

இது தொடர்பாக பல்வேறு தீர்ப்புகள் வரப்பெற்று அதனடிப்படையில் வடலூர் திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையம், திருஅருட்பிரகாச வள்ளற்பெருமானாரின் சுத்த சன்மார்க்க நெறிகளுக்கு எவ்விதத்திலும் குந்தகம் இல்லாமல் தனிப்பெரும் சிறப்புடன் பின்பற்றப்பட்டு வருகிறது.

1. அறங்காவலர்கள் சன்மார்க்கத்தை சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை பரிசீலிக்கையில் சன்மார்க்க நெறியை எத்தனை சதவீதம் ஒருவர் கைகொள்கிறார் என்பதையும் அறிய வாய்ப்போ, அளவீடோ இல்லை. மேலும் சன்மார்க்க நெறிகளுக்கு ஒவ்வாதவரை அறங்காவலர்களாக நியமிக்க பரிசீலனை செய்வதில்லை. இந்து சமய அறநிறுவனத்தின் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு 25ஏ-ல் சொல்லப்பட் ஷரத்துகளின்படி விண்ணப்பதாரர் உள்ளனரா என்பதையும் உறுதி செய்த பின்புதான் அறங்காவலர் நியமனம் செய்யப்படுகிறது என்பதை மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது. ..........

............ ஜீவகாருண்ய ஒழுக்கத்தையும், சன்மார்க்க நெறியையும் வெவ்வேறு என கருத இயலாது. புலை, கொலை தவிர்த்தல் என்பது மட்டுமல்லது பல்வேறு வாழ்வியல் ஒழுக்கங்களை கடைபிடிப்போரே சன்மார்க்கி ஆவார்.

மேலும் இந்துசமய அறநிலையத்துறையின் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு 25ஏ தற்போதுள்ள தமிழக அரசால் 2013-ம் ஆண்டு கொண்டு வரப்பட்டுள்ளது. அறங்காவலர் நியமனம் தொடர்பாக மனுதாரரின் கோரிக்கைகள் மேற்படி சட்டப்பிரிவில் நிபந்தனைகளாகவே உள்ளடங்கியுள்ளது. "சன்மார்க்கத்தை நானே நடத்துகின்றேன்" என்ற திருவருட்பிரகாச வள்ளலார் அவர்களின் கூற்றை ஆராய்ந்தும், மேற்குறிப்பிட்ட விவரங்களிலிருந்தும் அருட்பிரகாச தெய்வநிலையத்திற்கு அறங்காவலர்களாக நியமிக்கப்படும் மூன்று நபர்கள் மட்டுமல்ல. ஐந்து நபர்களுமே சன்மார்க்க ஈடுபாடு உள்ளவர்களாய் இருத்தல்

வேண்டும் என்பது அனைவரும் ஏற்கக்கூடிய கருத்து ஆகும். அறங்காவலர்கள் நியமனம் தொடர்பாக தற்போது உள்ள நடைமுறை என்பது சட்டப்படியும் நிர்வாக திட்டப்படியும் போதுமானதாக உள்ளது.

இருப்பினும் வடலூர், அருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையத்திற்கு அறங்காவலர்களாக நியமிக்கப்படுபவர்கள் சுத்த சன்மார்க்கத்தில் ஈடுபாடு உடையவர்களாகவும், கொலை, புலை, தவிர்த்தவர்களாகவும் இருப்பது குறித்து கவனத்துடன் கருத்தில் கொள்ளப்படும். இவ்வாறு மனுதாரரின் 10.07.2015 தேதியிட்ட கடிதத்தில் கண்டுள்ள கோரிக்கைக்கு மேற்கண்டவாறு பதில் அளித்து மனு முடிவு செய்யப்படுகிறது என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

**ஒப்பம்** : ஆணையர், இந்துசமய அறநிலையத்துறை, சென்னை-34. நாள் : 9.10.2015

---

## ஹலோ ... ஹலோ ...

மனுதாரர் திரு. **சந்திரமோகன்** அவர்களை தொடர்புகொண்டு பேசியபோது;

உயர்திரு. ஆணையரின் பதிலுரை நேரிடையாக இல்லை. வள்ளலார் கண்ட சங்கத்தில் சேர்பவர்களின் உரிமை குறைத்து குறிப்பிடப்பட்டுள்ளது. விசாரணையில் மிக நீண்ட விளக்கம் மற்றும் நிறைய ஆவணங்கள் கொடுத்தோம். அவைகளை எடுத்துக்கொள்ளாமல் பதிலுரை கொடுக்கப்பட்டுள்ளது. நியமனத்தின்போது பொதுவாக சட்டப்படியாக இருக்கப்பட வேண்டிய வயது, குற்றப்பின்னணி மற்றும் முகவரி விசாரிப்பு, நன்னடத்தை, புத்திசுவாதீனம், சொத்து விபரம் போன்றவற்றையே ஆணையர் குறிப்பிட்டுள்ளார். **ஆனால் நாங்கள் வைத்த கோரிக்கைக்கு நேரடி பதில் இல்லை.** அதாவது சைவ சமய

கோவிலுக்கு சைவசமயப் பற்றுடையவரையும், வைணவக் கோவிலுக்கு வைணவ சமயப் பற்றுடையவரையும் அந்தந்த மார்க்கக் கோவில்களுக்கு அந்தந்த மார்க்கப் பற்றுடையவரையும் தான் அறங்காவலர்களாக நியமிக்கிறார்கள். அதுபோல்தான் சுத்த சன்மார்க்கத்தில் பற்றுடையவரையே (சமய மத லட்சியத்தில் பற்றில்லாதவர்) நியமிக்க வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை நேரிடையாக ஏற்றுக்கொள்ளவில்லை.

அடுத்து சத்தியஞான சபைக்குள் அறங்காவலர்கள் சென்று பணியாற்றும் கடமையில் உள்ளதால், **கண்டிப்பாக புலால் உண்ணாதவர்களையே நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கும் நேரடியான பதில் இல்லை.** எங்களின் முக்கியஸ்தர்களை கலந்து ஆலோசித்து பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

எங்களைப் பொறுத்தவரை வள்ளலார் நிலையம் மேதகு அரசிடமே, அறநிலையத்துறையிடமே இருந்து சிறப்பாக செயல்பட வேண்டும் என்கிறோம். பல கோரிக்கைகளை நிலைய நிர்வாகி மற்றும் ஆணையர்கள் ஏற்றுக்கொண்டு ஆணையிட்டுள்ளார்கள். அதற்கு எங்களின் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளோம் என்று கூறினார்.

குறிஞ்சிப்பாடி திரு. **சுப்பிரமணியம்** அவர்களை தொடர்பு கொண்டதில்;

இந்த கோரிக்கை முதன்முதலாக வைத்துள்ளோம். அவர்களின் மேலான கவனம் இதில் இப்பொழுதுதான் திரும்பியுள்ளது. இனிவரும் காலங்களில் சுத்த சன்மார்க்கத்தில் பற்றுடையவர்களாக மற்றும் கொலை, புலை தவிர்த்தவர்களையே அறங்காவலர்களாக நியமிப்பார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன். **எனது மூத்த நண்பர் ஒருவருக்கு இந்நேரத்தில் நன்றி கூறுகிறேன்.** ஆணையரின் ஆணை

வெற்றியின் தொடக்கமாக கருதுகிறேன்.

தகுதியான அறங்காவலர்கள் இந்த பார்வதிபுரத்திலிருந்தே (வடலூர்) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றார்.

திருச்சி திரு. **கங்காதரன்** நம்மை தொடர்புகொண்டு கீழ்வருமாறு தெரிவித்தார்.

ஆணையரின் ஆணை எங்களின் மூன்றில் இரண்டு கோரிக்கையை புரிந்து கொண்டதையே காட்டுகிறது. நீண்ட பதிலுரையை ஆணையர் அவர்கள் கொடுத்தாலும் இறுதியில் அவர் குறிப்பிட்டது : **"இருப்பினும் வடலூர், அருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையத்திற்கு அறங்காவலர்களாக நியமிக்கப்படுபவர்கள் சுத்த சன்மார்க்கத்தில் ஈடுபாடு உடையவர்களாகவும், கொலை, புலை, தவிர்த்தவர்களாகவும் இருப்பது குறித்து கவனத்துடன் கருத்தில் கொள்ளப்படும்."** இதை கண்டிப்பாக வரும் நியமனத்தின் போது கருத்தில் கொள்வார்கள். மாறாக சமய லட்சியம் உள்ளவர்களையும், புலால் உண்பவர்களையும் நியமித்தால் அதை எதிர்த்து மேதகு நீதிமன்றத்தை நாடுவோம். நிலைய நிர்வாகம் நியாயமான பல கோரிக்கைகளை கேட்க முன்வந்துள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது. இது சுத்த சன்மார்க்க நெறி வெளிப்படும் காலம்.

திரு. **சகாதேவராஜாவை** (இராஜபாளையம்) தொடர்பு கொண்ட போது;

உண்மையான எங்களின் கோரிக்கைகள் மறுக்கவே முடியாது நிறைவேறியே தீரும் **இது ஆண்டவரின் கட்டளை. வள்ளலாரின் கொள்கை.** இது சத்தியம். சத்தியம். என்று கூறினார்.

நன்றி! : நமது நிருபர் பாலாஜி, வில்லாபுரம்.

**Which Stage of Life is in Vallalar Marga?**
**Celibate life?;Ascetic Life?;House Hold life?**
**or Renounced life?**
**—APJ. ARUL.**

***Which Stage of Life is suitable for Vallalar’s Margam?***
***Ascetic (canniyacam)? Celibate (piramacariyam)?***
***House hold (kirukastam)?***

Beloved friends,

Four Stages of Life are in the world especially for Religious reasons.

**They are;**

**1. CELIBATE LIFE (PIRAMACARIYAM):**

Persons who prefers to remain Unmarried.

**2. ASCETIC LIFE (VANAPPIRASTAM)**

One who has retired with his life to a forest to lead an Ascetic life.

***3. HOUSE HOLD LIFE (KIRUKASTAM)***

Life of a house holder.

***4. Renounced Life ( CANNIYACAM)***

One who practices extreme self-denial or self mortification for religious reasons.

(ie) one who has abandoned or renounced worldly affairs.

Beloved friends,

Now we will come to the subject.

WHICH STAGE OF LIFE MENTIONED ABOVE IS SUITABLE FOR HIS HOLINESS VALLALAR’S MARGAM ?.

Answer in this regard was clearly told by His Holiness Vallar. Evidence : Sathya Ciru Vinnappam at page nos. 560& 561 of His Prose.

HIS HOLINESS VALLALAR PRAYS AT GOD THAT the main obstacles of the Sutha Sanmargam namely Religions,Religious and Margams and their Rituals, Practice, Customs and Usage laid down on base of the Cankarpam and Vikarpam according to Sastras and also laid down on base of Varunam and ***ACIRAMAM*** according to the Custom of the World that these ***should not be attached to Us.***

Here ACIRAMAM means " FOUR STAGES OF LIFE" which are explained earlier stated above.

Therefore,

the Four Stages of Life namely Celibate (Piramacariyam), Ascetic (vanappirastam),House Hold (kirukastam) and Renounced (Canniyacam) ***should not be attached to Us***.

Then,

***WHAT PRACTICE IS AVAILABLE***

***IN HIS HOLINESS VALLALAR Margam.***

Beloved friends,

Answer in this regard is available in His Prose at

page No.438.

It is;

The Practice of Intense contemplation of GOD (Yoga) is not a Practice, Practice which is natural one (ie) that which is inherent, innate is called as Our marga Practice.

THEREFORE, IN HIS HOLINESS VALLALAR MARGAM, AND CAMATI PRACTICE (to sit in yogic contemplation)

THE STAGE OF LIFE is not specifically required and Only practice/ life that which is inherent, innate or natural is available.

Thank you my friends for making this Good enquiry.

கீழ்வரும் பாடல்வரியில் நம்மை சோதித்துப் பார்ப்போம்.

# ஆற்றாமை

திருவருட்பா — வள்ளலார்

எழுவினும் வலிய மனத்தினேன் மலஞ்சார்
ஈயினும் நாயினும் இழிந்தேன்
புழுவினும் சிறியேன்பொய்விழைந் துழல்வேன்
புன்மையேன் புலைத்தொழிற்கடையேன்
வழுவினும் பெரியேன் மடத்தினும் பெரியேன்
மாண்பிலா வஞ்சக நெஞ்சக்
குழுவினும் பெரியேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

கற்றமே லவர்தம் உறவினைக் கருதேன்
கலகர்தம் உறவினிற் களித்தேன்
உற்றமே தகவோர் உவட்டுற இருந்தேன்
உலகியற் போகமே உவந்தேன்
செற்றமே விழையும் சிறுநெறி பிடித்தேன்
தெய்வம்ஒன் றெனும்அறி வறியேன்
குற்றமே உடையேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

கடுமையேன் வஞ்சக் கருத்தினேன் பொல்லாக்
கண்மனக் குரங்கனேன் கடையேன்
நெடுமைஆண் பனைபோல் நின்றவெற் றுடம்பேன்
நீசனேன் பாசமே உடையேன்
நடுமைஒன் றறியேன் கெடுமையிற் கிளைத்த
நச்சுமா மரம்எனக்கிளைத்தேன்
கொடுமையே குறித்தேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

நிலத்திலும்பணத்தும் நீள்விழிமடவார்
நெருக்கிலும்பெருக்கிய நினைப்பேன்
புலத்திலும் புரைசேர் பொறியிலும் மனத்தைப்
போக்கிவீண் போதுபோக் குறுவேன்
நலத்தில்ஓர் அணுவும் நண்ணிலேன் கடைய
நாயினுங் கடையனேன் நவையேன்
குலத்திலும் கொடியேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

செடிமுடிந் தலையும்மனத்தினேன் துன்பச்
செல்லினால்அரிப்புண்டசிறியேன்
அடிமுடி அறியும் ஆசைசற் றறியேன்
அறிந்தவர் தங்களை அடையேன்
படிமுடி வழித்துக் கடிகொளும் கடையர்

பணத்திலும் கொடியனேன் வஞ்சக்
கொடிமுடிந் திடுவேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

அரங்கினிற் படைகொண் டுயிர்க்கொலை புரியும்
அறக்கடை யவரினுங் கடையேன்
இரங்கில்ஓர் சிறிதும் இரக்கம்உற் றறியேன்
இயலுறு நாசியுட் கிளைத்த
சிரங்கினிற் கொடியேன் சிவநெறி பிடியேன்
சிறுநெறிச் சழக்கையே சிலுகுக்
குரங்கெனப் பிடித்தேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

வாட்டமே உடையார் தங்களைக் காணின்
மனஞ்சிறிதிரக்கமுற் றறியேன்
கோட்டமே உடையேன் கொலையனேன் புலையேன்
கூற்றினும் கொடியனேன் மாயை
ஆட்டமே புரிந்தேன் அறத்தொழில் புரியேன்
அச்சமும் அவலமும் இயற்றும்
கூட்டமே விழைந்தேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

கலைத்தொழில் அறியேன் கள்உணுங் கொடியேன்
கறிக்குழல் நாயினும் கடையேன்
விலைத்தொழில் உடையேன் மெய்எலாம் வாயாய்
விளம்புறும் வீணனேன் அசுத்தப்
புலைத்தொழில் புரிவேன் பொய்யனேன் சீற்றம்
பொங்கிய மனத்தினேன் பொல்லாக்
கொலைத்தொழில் புரிவேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

பணமிலார்க் கிடுக்கண் புரிந்துணுஞ் சோற்றுப்
பணம்பறித் துழல்கின்ற படிறேன்
எணமிலா தடுத்தார்க் குறுபெருந்தீமை
இயற்றுவேன் எட்டியே அனையேன்
மணமிலா மலரிற் பூத்தனன் இருகால்
மாடெனத் திரிந்துழல் கின்றேன்
குணமிலாக் கொடியேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

கடியரில் கடியேன் கடையரில் கடையேன்
கள்வரில் கள்வனேன் காமப்
பொடியரில் பொடியேன் புலையரில் புலையேன்
பொய்யரில் பொய்யனேன் பொல்லாச்
செடியரில் செடியேன் சினத்தரில் சினத்தேன்

தீயரில் தீயனேன் பாபக்

கொடியரில் கொடியேன் அம்பலக் கூத்தன்

குறிப்பினுக் கென்கட வேனே

# மாயை வலிக்கழுங்கல்

தாவு மான்எனக் குதித்துக்கொண் டோ டித்

தைய லார்முலைத் தடம்படுங் கடையேன்

கூவு காக்கைக்குச் சோற்றில்ஓர் பொருக்கும்

கொடுக்க நேர்ந்திடாக் கொடியரில் கொடியேன்

ஓவு றாதுழல் ஈஎனப் பலகால்

ஓடி ஓடியே தேடுறும் தொழிலேன்

சாவு றாவகைக் கென்செயக் கடவேன்

தந்தை யேஎனைத் தாங்கிக்கொண் டருளே.

போக மாதியை விழைந்தனன் வீணில்

பொழுது போக்கிடும் இழுதையேன் அழியாத்

தேக மாதியைப் பெறமுயன் றறியேன்

சிரங்கு நெஞ்சகக் குரங்கொடும் உழல்வேன்

காக மாதிகள் அருந்தஓர் பொருக்கும்

காட்ட நேர்ந்திடாக் கடையரில் கடையேன்

ஆக மாதிசொல் அறிவறி வேனோ

அப்ப னேஎனை ஆண்டுகொண் டருளே.

விழியைத் தூர்க்கின்ற வஞ்சரை விழைந்தேன்

விருந்தி லேஉண வருந்திஓர் வயிற்றுக்
குழியைத் தூர்க்கின்ற கொடியரில் கொடியேன்
கோப வெய்யனேன் பாபமே பயின்றேன்
வழியைத் தூர்ப்பவர்க் குளவுரைத் திடுவேன்
மாய மேபுரி பேயரில் பெரியேன்
பழியைத் தூர்ப்பதற் கென்செயக் கடவேன்
பரம னேஎனைப் பரிந்துகொண் டருளே.

மதத்தி லேஅபி மானங்கொண் டுழல்வேன்
வாட்ட மேசெயும் கூட்டத்தில் பயில்வேன்
இதத்தி லேஒரு வார்த்தையும் புகலேன்
ஈயும் மொய்த்திடற் கிசைவுறா துண்பேன்
குதத்தி லேஇழி மலத்தினுங் கடையேன்
கோடை வெய்யலின் கொடுமையிற் கொடியேன்
சிதத்தி லேஉறற் கென்செயக் கடவேன்
தெய்வ மேஎனைச் சேர்த்துக்கொண் டருளே.

கொடிய வெம்புலிக் குணத்தினேன் உதவாக்
கூவம் நேர்ந்துளேன் பாவமே பயின்றேன்
கடிய நெஞ்சினேன் குங்குமம் சுமந்த
கழுதை யேன்அவப் பொழுதையே கழிப்பேன்
விடியு முன்னரே எழுந்திடா துறங்கும்
வேட னேன்முழு மூடரில் பெரியேன்

அடிய னாவதற் கென்செயக் கடவேன்
அப்ப னேஎனை ஆண்டுகொண் டருளே.

தூங்கு கின்றதே சுகம்என அறிந்தேன்
சோற தேபெறும் பேறதென் றுணர்ந்தேன்
ஏங்கு கின்றதே தொழிலெனப் பிடித்தேன்
இரக்கின் றோர்களே என்னினும் அவர்பால்
வாங்கு கின்றதே பொருள்என வலித்தேன்
வஞ்ச நெஞ்சினால் பஞ்செனப் பறந்தேன்
ஓங்கு கின்றதற் கென்செயக் கடவேன்
உடைய வாஎனை உவந்துகொண்ட ருளே.


வருத்த நேர்பெரும் பாரமே சுமந்து
வாடும் ஓர்பொதி மாடென உழன்றேன்
பருத்த ஊனொடு மலம்உணத் திரியும்
பன்றி போன்றுளேன் நன்றியொன் றறியேன்
கருத்தி லாதயல் குரைத்தலுப் படைந்த
கடைய நாயினிற் கடையனேன் அருட்குப்
பொருத்தன் ஆவதற் கென்செயக் கடவேன்
புண்ணி யாஎனைப் புரிந்துகொண் டருளே.

துருக்க லோகொடுங் கருங்கலோ வயிரச்
சூழ்க லோஎனக் காழ்கொளும் மனத்தேன்

தருக்கல் ஆணவக் கருக்கலோ டுழல்வேன்
சந்தை நாயெனப் பந்தமுற் றலைவேன்
திருக்கெ லாம்பெறு வெருக்கெனப்199 புகுவேன்
தீய னேன்பெரும் பேயனேன் உளந்தான்
உருக்கல் ஆகுதற் கென்செயக் கடவேன்
உடைய வாளனை உவந்துகொண் டருளே.

கான மேஉழல் விலங்கினிற் கடையேன்
காம மாதிகள் களைகணிற் பிடித்தேன்
மான மேலிடச் சாதியே மதமே
வாழ்க்கை யேஎன வாரிக்கொண் டலைந்தேன்
ஈன மேபொருள் எனக்களித் திருந்தேன்
இரக்கம் என்பதோர் எட்டுணை அறியேன்
ஞான மேவுதற் கென்செயக் கடவேன்
நாய காஎனை நயந்துகொண் டருளே.
இருளை யேஒளி எனமதித் திருந்தேன்
இச்சை யேபெரு விச்சைஎன் றலந்தேன்
மருளை யேதரு மனக்குரங் கோடும்
வனமெ லாஞ்சுழன் றினம்எனத் திரிந்தேன்
பொருளை நாடுநற் புந்திசெய் தறியேன்
பொதுவி லேநடம் புரிகின்றோய் உன்றன்
அருளை மேவுதற் கென்செயக் கடவேன்
அப்ப னேஎனை ஆண்டுகொண் டருளே.

# புலால் உண்பவர்கள் யார்?



**அன்பர்களே!**

ஆண்டவர் என்பவரே அன்றும் இன்றும் என்றும் இருப்பவர். அவரே ஒன்றேனும் ஒன்று.

அவரே; எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லாப் பதங்களையும், எல்லாச் சத்திகளையும், எல்லாச் சத்தர்களையும், எல்லாக் கலைகளையும், எல்லாப் பொருள்களையும், எல்லாத் தத்துவங்களையும், எல்லாத் தத்துவிகளையும், எல்லா உயிர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லா இச்சைகளையும், எல்லா ஞானங்களையும், எல்லாப் பயன்களையும், எல்லா அனுபவங்களையும், மற்றை எல்லாவற்றையும் தமது திருவருட் சத்தியால் தோற்றுவித்தல், வாழ்வித்தல், குற்றம் நீக்குவித்தல், பக்குவம் வருவித்தல், விளக்கஞ் செய்வித்தல் என்னும் ஐந்தொழில்கள் முதலிய பெருங் கருணைத் தொழில்களை இயற்றுவிக்கின்றவரென்றும், எல்லாம் ஆனவரென்றும், ஒன்றும் அல்லாதவ ரென்றும், சர்வ காருண்ய ரென்றும், சர்வ வல்லபரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்பு உயர்வு இல்லாத தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதியர் என்றும் சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே, அகம், புறம் முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்தமெய்யறிவு என்னும் பூரணப் பொதுவெளியில், அறிவா ரறியும் வண்ணங்களெல்லாமாகி விளங்குகின்றார்.

ஆக, எல்லாமே கடவுளின் அம்சமே. நிற்க! இங்கு மிகவும் நோக்க வேண்டியது;

நமக்கு அறிவென்பது ஓர் சிறிதும் தோன்றாது அஞ்ஞான இருளில் சிற்றணுப்பசுவாகி இருந்தோம். அதன் பின்பு நமக்குள் உள்ளொளியாகி இருந்து அனைத்து உண்மைகளை அறிவு விருத்தியில் தெரியப்படுத்துவதாக இயற்கையின் (கடவுளின்) உண்மை உள்ளது. ஒவ்வொரு உண்மையும் ஒவ்வொரு தத்துவம் ஆகும். இரக்கம் என்பது நற்குணங்களில் ஒன்று. இந்த குணம் எல்லோரிடமும் இயற்கையாகவே உள்ளது. அது விருத்தியாக வேண்டும் என்பது ஓர் உண்மையாகும். அந்த இரக்கம் குறித்து அறியாமல் இருந்தால் எங்ஙனம் எல்லா உயிர்களும் நம் உயிர் போல் என்று சிந்திக்க முடியும்? இந்த இரக்கம் என்ற உண்மைக் குறித்து எவர் ஒருவர் விசாரணை செய்கிறார்களோ அவர்கள் எல்லா உயிரையும் தம் உயிர் போல் கருதுவார்கள். நிற்க !

மற்ற உயிர்களிடத்தில் தவிர மனிதன் மீதும், அவன் உரிமைக்கு குரல் கொடுப்பவர்களை தலைவர்களாக காண்கிறோம். தன் சுய நலம் கருதாமல் மனித நலனே தன் பணி என உள்ளவர்களை பாராட்டாமல் இருக்க முடியுமா? மற்ற உயிர் குறித்து விசாரிக்காமல் இருக்கிறார். பழக்கத்தில் புலால் சாப்பிடாதவர் என்பதினால் மற்ற குணங்கள் இருப்பவர் என்று கருத முடியாது. ஏமாற்றுதல், உண்மையை மறைத்தல், சுய நலம், மற்றவர்களை தாழ்வாக பார்த்தல் போன்ற குற்றங்களை பெற்றிருப்பவரையும் நாம் பார்க்கிறோம். இங்கு புலால் சாப்பிடாமல் இருப்பது என்பது இரக்கம் என்பது ஆகாது. எல்லா உயிரும் தம் உயிர் போல் என்ற உண்மையும்,அதன் அடிப்படையில் மற்ற உயிர்களுக்கு உதவுதலும் ஆகும்.



**அன்பர்களே!**

எந்த ஒருவராவது புலால் சாப்பிடுவதே சிறந்தது. புலால் மறுப்பது மிகவும் கீழ் செயல். புலால் மறுப்பவர்கள் அறிவில்லாதவர்கள் என சொல்லியுள்ளார்களா?

காரணம் மற்ற உயிர்களை நேசிப்பது சிறப்பான ஒன்று தான் என எல்லோருமே ஒத்துக் கொள்கிறார்கள். புலால் சாப்பிடுவர்கள் புலால் உணவுக்கு அவ்வுயிர்கள் கொல்லப் படுவதை பார்க்க மறுக்கிறார்கள். புலால் உணவுக்கு கொல்லப்படும் உயிரினங்களிடம் அவை கொல்லப்படும் வரை பரிவுடன் அவைகளை நன்கு பார்த்துக். கொள்வதை நாம் கண் கூட பார்க்கலாம். இதிலிருந்து என்ன தெரிகிறது? இரக்கத்தின் முழு உண்மையை அவர்கள் அறியவில்லை அல்லது அறிய நேரமில்லை.

இயற்கையான இந்த மாபிரபஞ்சத்தில் எல்லா உயிர்களும் வாழும் உரிமையை இறைவன் கொடுத்துள்ளான். இறைவனிடத்தி லிருந்து தோன்றிய ஒன்றை எங்ஙனம் நாம் அழிக்க கூடும். அவைகளை கொல்லும் போது அவைகளுக்கு வலி,இரத்தம் துன்பம், ஏற்படாது என்று சொல்லமுடியுமா? இவை போன்ற உண்மைகளை தான் நம் சகோதரர்கள் விசாரிக்கக் கூட நேரமில்லை. நாம் இந்த இரக்கம் குறித்து விசாரித்தோம் நாம் புலால் உணவு விட்டோம். அது போல் தான் அவர்களும் விசாரிப்பார்கள் புலால் உண்பதை கைவிடுவார்கள். இது சத்தியம். எக்காரணம் கொண்டும் அவர்களை எங்ஙனம் இறைவனிடத்திலிருந்து பிரித்து பார்க்க முடியும்? மனிதர்களிடம் காட்டும் அன்பை மற்ற உயிர்களிடத்தும் காட்டுங்கள் என்கிறோம் அவ்வளவே. இதோ நம் அன்பர்கள் கீழ்வருமாறு தான் சொல்கிறார்கள்; என்ன சார் செய்ய, மதி வேண்டாம் என்று சொன்னாலும் வாய் விடமாட்டேன்கிறது. நான் கொல்லவில்லை. நான் செவ்வாய், வெள்ளிக் கிழமை சாப்பிடுவதில்லை தெரியுமா? வீட்டில் நாங்கள் வளர்ப்பதை சாப்பிட மாட்டோம். விடலாம் என நினைக்கிறேன். இப்ப அவ்வளவா சாப்பிடுவதில்லை. என்ன தான் புலால் உணவு சாப்பிட்டாலும், எந்த உயிரினத்தையாவது மடியில் வைத்துக் கொண்டு கத்தியால் குத்தி குத்தி விளையாடுவார்களா ? அவையின் கண்ணை ஊசியால் குத்தி குத்தி விளையாடுவதற்கு ஒத்துக்கொள்வார்களா? இதிலிருந்து என்னத் தெரிகிறது? அவர்களிடமும் /எல்லாரிடமும் இயற்கையில் கருணை உள்ளது. அந்த கருணையை விருத்தி செய்ய செய்ய இயற்கையின் உண்மை வெளிப்படும். இரக்கம் என்ற ஒழுக்கம் நம்மிடம் வளர்ந்து கொண்டு தான் வருகிறது. என்ன காலம் தான் அதிகமாகும். கடவுள் அருள் கிடைப்பது தள்ளிப் போகும். எனவே எல்லா உயிர்களுக்கும் நம் உயிர் போல் தான் என்பார்க்கு கடவுளின் சொரூபம் காண வரும்.மற்றபடி புறத்தில் எந்த ஒரு வேறுப்பாட்டையும் கடவுள் வைக்கவில்லை. கடவுள் அருள் எல்லார்க்கும் சரிசமமாகவே உள்ளது. கடவுள் என்பவர் தாயை விட கருணையுள்ளம் கொண்டவர். அக்கடவுளை காண வேண்டுமானால் அவரிடம் உள்ள கருணைப் போல் நம்மிடம் இருந்தால் மட்டுமே நாம் அவரை காண முடியும். இதுவே உண்மை. இரக்கம் குறித்து இன்றே அறிய முற்படுவோம்.

**- ஏபிஜெ அருள்.**